**சுருக்கம்**

கேளிக்கை வரி 2008–2009 – தமிழில் பெயர் சூட்டப்படும் அனைத்து தமிழ் திரைப்படங்களுக்கும் கேளிக்கை வரியிலிருந்து முழுவரி விலக்களிக்கப்பட்டது – உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பு – ஈடு கட்டுதல் – நிதி ஒதுக்கீடு – உள்ளாட்சி அமைப்புகளுக்கு தொகை பகிர்ந்தளித்தல் – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

**அரசு ஆணை (நிலை) எண். 262** **நாள் :24.12.2008**

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நக4) துறை**

படிக்கப்பட்டது :

1) அரசு ஆணை (நிலை) எண்.55, நநி(ம)குவ துறை, நாள் 31.3.2008
2) அரசு ஆணை (2 ப) எண்.110, நநி(ம)குவ துறை, நாள் 1.8.2008
3) அரசு ஆணை (நிலை) எண்.154, நநி(ம)குவ துறை, நாள் 12.8.2008
4) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண். 49655/2008/பி3, நாள் 20.10.2008
5) நகராட்சி நிர்வாக ஆணையரின் கடிதம் ந.க.எண். 49627/2008/பி3, நாள் 7.10.2008
6) பேரூராட்சிகளின் ஆணையர் கடிதம் ந.க.எண்.15358/2008/உ4, நாள் 10.11.08
7) நகராட்சி நிர்வாக இயக்குநரின் கடிதம் ந.க.எண். 27820/பி2/2008 நாள் 1.12.2008.
8) சென்னை மாநகராட்சி ஆணையரின் கடிதம் எப்.ஏ.சி. எல் &ஜி1/ 7127/2008, நாள் 17.12.2008

**ஆணை :**

மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், தமிழில் பெயரிடப்படும் தமிழ் திரைப்படங்களுக்கு முழுவரி விலக்களிப்பதனால் 2008–09 ஆம் ஆண்டில் மாநகராட்சிகள், நகராட்சிகள் மற்றும் பேரூராட்சிகளுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினை ஈடுகட்ட ரூ.27.00 கோடி (ரூபாய் இருபத்து ஏழு கோடி மட்டும்) தமிழ் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி இழப்பீடாக வழங்கி அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும் அவ்வரசாணையில் இத்தொகையை அரசின் விருப்பத்திற்கேற்றவாறு நகர்ப்புற உள்ளாட்சிப் பகுதிகளில் மிக முக்கியத்துவம் வாய்ந்த சிறப்பான புதுமையான திட்டங்களுக்காக பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென குறிப்பிடப்பட்டுள்ளது.

2) மேற்குறிப்பிட்ட 2008-09 ஆம் ஆண்டு தமிழ் திரைப்படங்களின் மீதான கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய் நிதி ரூ.27.00 கோடியில், முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் ரூ.2.00 கோடி (ரூபாய் இரண்டு கோடி மட்டும்) நகராட்சி / மாநகராட்சி பள்ளி மாணவ / மாணவியர் கல்வி உதவித் தொகைத் திட்ட பொது நிதிக்கு வழங்கியும், இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், ரூ.4.00 கோடி (ரூபாய் நான்கு கோடி மட்டும்)-ல் தூத்துக்குடி பக்கிள் ஓடை மேம்பாட்டு திட்டப் பணிகளுக்கு வழங்கியும் அரசாணைகள் வெளியிடப்பட்டுள்ளன. தற்போது, மீதம் ரூ.21.00 கோடி (ரூபாய் இருபத்தியொரு கோடி மட்டும்) மீதமுள்ளது.

3) நகராட்சி நிர்வாக இயக்குநர் ஐந்து மற்றும் ஏழாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதங்களில் நகராட்சிகள் / மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) உள்ள மண்சாலைகளை தார் மற்றும் கான்கிரீட் சாலைகளாக மாற்ற ரூ.6.00 கோடியும் (ரூபாய் ஆறு கோடி மட்டும்) அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்த 2008-09 மற்றும் 2009-10 ஆம் ஆண்டுகளில் இரண்டு ஆண்டுகளுக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.11.25 கோடியினை, 2008-09 ஆம் ஆண்டு திட்டத்திற்கு 2008-09 ஆம் ஆண்டு கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து ரூ.5.25 கோடியும், 2009-2010 ஆண்டிற்கான திட்டத்திற்கு 2009-2010 ஆம் ஆண்டு கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து 6.00 கோடியும் வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் 2009-10 ஆம் ஆண்டிற்கான அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்கான ரூ.6.00 கோடியினை 2009-2010 ஆம் ஆண்டு கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து பெற உரிய செயற்குறிப்பு அடுத்த நிதியாண்டில் அரசுக்கு அனுப்பப்படும் என்றும் நகராட்சி நிர்வாக இயக்குநர் தெரிவித்துள்ளார். இது தவிர நகராட்சி நிர்வாக ஆணையர் நான்காவதாக படிக்கப்பட்ட தனது கடிதத்தில், தாம்பரம்-அன்னசாகரம் இடையே மேம்பாலம் கட்ட ரூ.70.00 இலட்சம் அரசிடம் மானியம் கோரி அரசுக்கு தனியாக செயற்குறிப்பு அனுப்பியுள்ளார்.

4) பேரூராட்சிகளின் ஆணையர், ஆறாவதாக படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில், ஒரு பேரூராட்சிக்கு தலா ரூ.20.00 இலட்சம் வீதம் 10 பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலக கட்டிடம் கட்ட ரூ.2.00 கோடியும் , ஒரு பேரூராட்சிக்கு தலா ரூ.10.00 இலட்சம் வீதம் 50 பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த ரூ.5.00 கோடியும் ஆக மொத்தம் ரூ.7.00 கோடி கேளிக்கை வரி வருவாய் இழப்பு ஈடு செய்யும் நிதியிலிருந்து வழங்குமாறு கேட்டுக் கொண்டுள்ளார்.

5) சென்னை மாநகராட்சி ஆணையர், எட்டாவதாகப் படிக்கப்பட்டுள்ள தனது கடிதத்தில், பழுதடைந்த நிலையிலுள்ள தண்டையார் பேட்டையிலுள்ள தொற்று நோய் மருத்துவமனையினை சீரமைக்க ரூ.1353.25 இலட்சங்கள் கேளிக்கை வரி வருவாய்இழப்பீடு ஈடு செய்யும் நிதியிலிருந்து வழங்கக் கேட்டுக் கொண்டுள்ளார். மேலும் இதற்கான திட்டமதிப்பீடு அறிக்கையினையும் அளித்துள்ளார்.

6) மேற்கண்ட சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக இயக்குநர், பேரூராட்சிகளின் ஆணையர் மற்றும் சென்னை மாநகராட்சி ஆணையர் ஆகியோரின் செயற்குறிப்புகளை அரசு கவனமாக ஆய்வு செய்தது. ஆய்வின் முடிவில், 2008-2009 ஆம் ஆண்டு

கேளிக்கை வரி வருவாய் இழப்பீடு ஈடு செய்யும் நிதியில் மீதமுள்ள ரூ.21.00 கோடியை (ரூபாய் இருபத்தோரு கோடி மட்டும்) முக்கியத்துவம் வாய்ந்த பணிகளுக்காக துறைத் தலைவர்களுக்கு கீழ்க்கண்டவாறு பகிர்ந்தளிக்கலாம் எனக் கருதி, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

1) சென்னை மாநகராட்சி ஆணையர் :-

மைய அரசு கணக்குத் தணிக்கைத் தலைவர் தமது அறிக்கையில், தண்டையார்பேட்டை-தொற்று நோய் மருத்துவமனை பழுதடைந்து பல்வேறு குறைபாடுகளுடன் உள்ளதாக சுட்டிக் காட்டியுள்ளார். அக்குறைபாடுகளை உடனடியாக நிவர்த்தி செய்ய வேண்டியதன் அவசியத்தைக் கருத்தில் கொண்டு, இப்பணிக்காக ரூ.8.00 கோடி (ரூபாய் எட்டு கோடி மட்டும்) ஒதுக்கீடு செய்யப்படுகிறது. மீதித் தொகையை சென்னை மாநகராட்சி தனது சொந்த நிதியிலிருந்து மேற்கொள்ள வேண்டும்.

2) நகராட்சி நிர்வாக இயக்குநர் :-

அ) அண்ணா மறுமலர்ச்சித் திட்டம், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் அவர்களின் அறிவிப்பு என்பதால் அதனை நடைமுறைப்படுத்த நிதி ஒதுக்கீடு தேவைப்படுவதால், 2008-09 ஆம் ஆண்டு அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்திற்காக ரூ.5.25 கோடி (ரூபாய் ஐந்து கோடியே இருபத்தைந்து இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

ஆ) நகராட்சி / மாநகராட்சிகளில் (சென்னை நீங்கலாக) மண்சாலைகளை தார் மற்றும் கான்கிரீட் சாலைகளாக மாற்றும் பணி அதிமுக்கியத்துவம் வாய்ந்த பணியாகக் கருதப்படுகிறது. எனவே இப்பணிக்காக ரூ.5.30 கோடி (ரூபாய் ஐந்து கோடியே முப்பது இலட்சம் மட்டும்) ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

இ) தர்மபுரி – அன்னசாகரம் இடையே பேவர்ஸ் கட்டும் பணிக்கென ரூ.0.70 கோடி ஒதுக்கீடு செய்யப்படுகிறது.

3) பேரூராட்சிகளின் ஆணையர் :-

மீதமுள்ள ரூ.1.75 கோடியை பேரூராட்சிகளில் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட, நிதி ஒதுக்கீடு செய்யப்படுகிறது. இப்பணியை மேற்கொள்ளுவதற்கான முன்னுரிமையை எந்தெந்த பேரூராட்சிகளுக்கு அளிப்பது என்பது தொடர்பாக பேரூராட்சிகளின் ஆணையரே முடிவு செய்யலாம். பேரூராட்சிகளுக்கு புதிய அலுவலக கட்டிடங்கள் கட்ட பகுதி –2 திட்டத்தின் கீழ் ரூ.5.00 கோடி வழங்கப்பட்டுள்ளதால், இப்பணிக்காக கேளிக்கைவரி வருவாய் இழப்பீடு செய்யும் நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை.

7) மேற்குறிப்பிட்டபடி பகிர்ந்தளிக்கப்பட்ட தொகையை சம்பந்தப்பட்ட துறைத் தலைவருக்கு தமிழ்நாடு நகர்ப்புற நிதி மற்றும் கட்டமைப்புத் தலைவர் மற்றும் மேலாண்மை

இயக்குநர் விடுவிக்க வேண்டும் என்றும், அவ்வாறு விடுவிக்கும் போது மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான மொத்த தொகையில் 50 சதவீத தொகையை முன்பணமாகவும், மீதி 50 சதவீத தொகையை பணி முடிவுற்றவுடனும் வழங்கப்பட வேண்டும் என்றும், மேற்குறிப்பிட்ட பணிகளுக்கான நிர்வாக ஒப்புதலை சம்மந்தப்பட்ட துறைத் தலைவர்களே வழங்கலாம் என்றும், மேற்கொள்ளப்பட்ட பணிகள் குறித்த காலமுறை அறிக்கை அவ்வப்போது துறைத் தலைவர்களால் அரசுக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என்றும் அரசு ஆணையிடுகிறது.

/ ஆளுநரின் ஆணைப்படி /

நிரஞ்சன் மார்டி,
அரசுச் செயலாளர்.

பெறுநர்
தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர், டூபிட்கோ, சென்னை –35.
நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை –5.
பேரூராட்சி ஆணையர், சென்னை – 108.
சென்னை மாநகராட்சி ஆணையர், சென்னை – 3
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை – 600 005
மாநில கணக்காயர், சென்னை 600 018
உள்ளுறை தணிக்கை அலுவலர், மாநில கணக்காயத் துறை தலைவர் அலுவலகம், தலைமைச் செயலகம், சென்னை . 600 009

நகல்
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சரின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைச் செயலாளரின் தனிச் செயலாளர், சென்னை – 600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந II) துறை, சென்னை – 600 009.
இருப்புக் கோப்பு / உதிரி நகல்.

/ ஆணைப்படி அனுப்பப்படுகிறது /

பிரிவு அலுவலர். 24/12/10